**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**சுய கற்றல் கையேடு - 2020**
**நாடகமும் அரங்கியலும்**

**தரம் 9**

## பாத்திரப் பண்புருவாக்கம்

- பாத்திரத்தில் காணப்படும் அனைத்து விடயங்களும் பாத்திரப் பண்புருவாக்கம் எனப்படும்.
- பாத்திரப் பண்புருவாக்கத்தில் பின்வரும் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.
    - உடலியற் பண்புகள்
    - குரலியற் பண்புகள்
    - உளவியற் பண்புகள்
    - சமூகவியற் பண்புகள்


- நடிகர் ஒருவர் பாத்திரம் ஒன்றைப் பண்புருவாக்கம் செய்யும் போது உடல், குரல், உளம், சமூக இயல்பு என்கின்ற அனைத்து விடயங்களையும் தன்னகத்தே கொண்டிருத்தல் வேண்டும்.
- பாத்திரத்தின் உடலியற் பண்புகளாக (பௌதிகத் தோற்றம்) வயது, பால், நிறம், உயரம், பருமன் என்பன காணப்படுகின்றன.
- பாத்திரத்தின் உளவியற் பண்புகளாக பாத்திர மனநிலை, நடத்தைகள், விருப்பு வெறுப்புக்கள், பழக்கவழக்கங்கள், பாத்திரம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்பன காணப்படுகின்றன.
- பாத்திரத்தின் சமூகவியற் பண்புகளாக தொழில், சாதி, சமயம், அந்தஸ்து, மொழி, பண்பாட்டுப் பின்னணி என்பன காணப்படுகின்றன.

## பாத்திரம்

- பாத்திரம் என்பது தாங்கி நிற்றல் எனப் பொருள்படும். அதாவது இன்னொன்றைத் தாங்கி நிற்பது பாத்திரம் ஆகும்.
- நாடகமொன்றில் பாத்திரத்தைத் தாங்குபவர் நடிகர் ஆவார்.
- மனிதர்கள், விலங்குகள், பறவைகள், மரம், செடி, கொடி, தேவதைகள், பாவைகள் என யாவுமே இன்னொருவரால் சித்தரிக்கப்படும் போது அவை பாத்திரங்கள் ஆகும்.
- ஒவ்வொரு பாத்திரத்திற்குள்ளும் அவையாவற்றிற்கே உரித்தான சிந்தனைப்போக்கு, உணர்ச்சி, செயல்கள், பழக்கவழக்கங்கள், பாவனைகள், நடையுடைத்தன்மைகள் போன்றவை உள்ளடங்கியிருக்கும். எனவே தான் ஒரு பாத்திரத்தைப் போன்று மற்றொன்று இருப்பதில்லை.

## வகிபாகம்

- பாத்திரமொன்றில் உள்ளடங்கியிருக்கும் பல்வேறு முகங்களே வகிபாகமாகும்.
- ஒவ்வொரு பாத்திர வகிபாகத்திற்கும் பொருத்தமான மெய்நிலைகள் காணப்படும்.
- வகிபாகங்கள் மாறும் போது அவற்றின் பேச்சுப் பாணியும் வேறுபடும்.
- வகிபாகங்களுக்கு ஏற்ப பாத்திரங்கள் அணியும் உடைகளும், அணிகலன்களும் வேறுபட்டுக் காணப்படும்.
- உதாரணமாக வைத்தியர் என்ற ஒரு பாத்திரத்தினுள் காணப்பெறும் பல்வேறு வகிபாக முகங்களைப் பின்வரும் வரைபு சுட்டிக் காட்டுகின்றது.




## பாத்திர ஒன்றிப்பு

- பாத்திர ஒன்றிப்பு என்பது பாத்திரத்தை ஏற்று அப்பாத்திரத்தின் முழுமையான இயல்புகளை வெளிக்காட்டுவதாகும். அதாவது பாத்திர இயல்புகளுடன் ஐக்கியமாதல் அன்றேல் இரண்டறக்கலத்தல் அன்றேல் பாத்திரமாக வாழ்தல் எனவாகும்.
- பாத்திர ஒன்றிப்பு என்பதைப் போலச் செய்தல், பாத்திரப் பண்புருவாக்கம் செய்தல், பாத்திரமேற்று நடித்தல் எனவும் கூறலாம்.
- பாத்திரத்தின் இயல்புகள் உடல், குரல், சமூகக்குணம் சார்ந்தவையாகும்.
- பாத்திரமொன்றின் இயல்புகள் அகரீதியாகவும், புறரீதியாகவும் அமையும்.
- அகம் சார்ந்தவைகளாக நடிகனது உடலசைவுகள், உளம் (உணர்வுகள்), குரல் என்பன அமையும்.
- புறம் சார்ந்தவைகளாக நடிகனது உடற் தோற்றம், ஆடைகள், அணிகலன்கள், ஒப்பனை என்பன அமையும்.

## பாத்திரச் சித்திரிப்பு

- நாடக ஆசிரியரினால் எழுத்தில் உருவாக்கப் பெறும் பாத்திரத்தினை நடிகன் தனது உடல், குரல், உணர்ச்சி வெளிப்பாடுகளின் மூலம் உயிருள்ள பாத்திரமாக அரங்கில் படைப்பாக்கம் செய்வதே பாத்திரச் சித்திரிப்பாகும்.
- பாத்திரச் சித்திரிப்புக்கள் நான்கு வகைப்படும். அவை

1. உடல்வழிச்சித்திரிப்பு
2. குரல்வழிச்சித்திரிப்பு
3. உணர்ச்சிவழிச்சித்திரிப்பு
4. காண்பியவழிச்சித்திரிப்பு என்பனவாகும்.

- பாத்திரச் சித்திரிப்பின் போது உடல் மற்றும் உடல் அசைவுகளைப் பயன்படுத்தி நடிக்கப் பெறுவது உடல்வழிச்சித்திரிப்பு ஆகும்.
- குரல் கொண்டு வாய் மொழி மூலமான பேச்சு, உரையாடல், பாடல்கள், சத்தங்கள் கொண்டு சித்திரிக்கப் பெறுவது குரல்வழிச்சித்திரிப்பு ஆகும்.
- பாத்திரங்களின் முக பாவத்தின் ஊடாக உணர்ச்சிகளைக் காட்டி நடித்தல் உணர்ச்சிவழிசித்திரிப்பு ஆகும்.
- வேடஉடை, ஒப்பனை என்பவற்றினூடாக நடிகர் வெளிப்படுத்துவது காண்பியவழிச்சித்திரிப்பு ஆகும்.

## அரங்கவிளையாட்டு

- அரங்கிற்குரிய மகிழ்வளிப்பை ஏற்படுத்தி, நடிகரின் திறன் விருத்தியை தூண்டுவதுடன் உடல், குரல், உளப்பயிற்சியாகவும் நடிப்பிற்கு தயார்படுத்தவும் உதவும் விளையாட்டுக்கள் அரங்க விளையாட்டுக்களாகும்.
- ஆடும்வீடும், பழக்கலவை, நண்டு, இறால், மீன், கோழிகோட்டான், கரடியும் கிராமமக்களும், காகம் உயிர்பெறல் போன்ற பல அரங்க விளையாட்டுக்களை கூட்டாகச் சேர்ந்து விளையாடலாம்.
- கூட்டாகச் சேர்ந்து விளையாடுவதன் மூலம் பின்வரும் திறன்கள் ஒருவரிடம் விருத்தியடைகின்றன.
    - கற்பனைத் திறன்
    - தலைமைத்துவம்
    - புரிந்துணர்வு
    - விட்டுக்கொடுப்பு
    - ஒருவரையொருவர் அறிதல்
    - உறவுநிலை
    - உதவி செய்யும் மனப்பாங்கு
    - ஏனையோரது கருத்துக்களை மதித்தல்
- கூட்டாக விளையாடும் அரங்க விளையாட்டுக்கள் நடிகனது நடிப்பாற்றலிற்கு பின்வருமாறு துணை செய்கின்றது.
    - சித்திரிப்புப் பணியை இலகுவாக்கும்
    - கற்பனையினை விருத்தி செய்யும்
    - உடல், உள, குரல் ஒருமைப்பாட்டினைப் பேணும்

- நினைவாற்றலை விருத்தி செய்யும்
- சபைக் கூச்சம் நீக்கப் பெறும்
- பரஸ்பர ஒத்துழைப்பை ஏற்படுத்தும்

## மெய்நிலைகள்

- மெய்நிலை என்பது ஒரு பாத்திரம் வெளிப்படுத்தி நிற்கும் உடற்தோற்றப்பாடு ஆகும்.
- மெய்நிலையைத் தனியாகவோ கூட்டாகவோ சித்திரித்துக் காட்டலாம்.
- பாத்திர மெய்நிலைகள் ஒவ்வொன்றும் தனக்கேயுரிய தனித்துவமான கருத்தினைக் குறிப்பாகச் சுட்டி நிற்கும். உதாரணமாக
    - பாத்திரத்தை அடையாளப்படுத்தும்
    - பாத்திரச் செயலை விளக்கும்
    - பாத்திர உணர்வுகளை வெளிப்படுத்தும்
- மெய்நிலைகளைத் தீர்மானிப்பதில் பின்வரும் அம்சங்கள் தாக்கம் செலுத்துகின்றன.
    - களம்
    - சந்தர்ப்பம்
    - பாத்திரம்
    - செயல்
    - உணர்வு
    - பாத்திர உணர்வுநிலை
- மெய்நிலைகள் ஒவ்வொன்றும் சரியான முறையில் சித்திரிக்கப் பெறாதுவிடின் அவை பிறிதொரு அர்த்தத்தினைத் தவறாக வழங்கும்.
- மெய்நிலைகளின் முறையான வெளிப்பாட்டிற்கு நடிகனுக்கு உடற்தளர்வுப் பயிற்சி அவசியம்.

## பாவவெளிப்பாடு

- பாவம் என்பது உணர்ச்சி வெளிப்பாடாகும்.
- பாவத்தினை பரதர் ‘‘ரஸம்’’ எனவும், தொல்காப்பியர் ‘‘மெய்ப்பாடு’’ என்றும் குறிப்பிடுகின்றார்.
- பாவ வெளிப்பாட்டிற்கு ‘‘முகம்’’ பிரதான ஊடகமாகும்.
- பாவ வேறுபாட்டிற்கேற்ப முகத்தின் தோற்றப்பாடு வேறுபடும்.
- உணர்வு வெளிப்பாட்டில் முகத்திலுள்ள உறுப்புக்களில் கண் பிரதானமாகும்.
- சொற்களால் மட்டுமன்றி கண்களுக்கூடாகவும் கருத்துக்கள் பரிமாற்றப்படுகின்றன.
- பாத்திரப் பண்புக்கேற்ப பாவம் வேறுபடும்.
- பாவ வெளிப்பாட்டில் பாத்திரம், செயலியக்கம், சொல், இசை, பாத்திர உறவுநிலை, நிறுத்தற்குறி, ஒலிவிளைவு, சந்தர்ப்பம், சூழமைவு, களம் என்பன தாக்கம் செலுத்தும்.

## சொல்லாடல்

- சொல்லாடல் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களின் உரையாடலாகும்.
- நாடக மோடிகளின் பண்புகளிற்கேற்ப சொல்லாடலின் பண்பும் வேறுபடும்.
- யதார்த்த மோடி நாடகத்தின் சொல்லாடற் பகுதி இயல்புத் தன்மை வாய்ந்ததாகவும், யதார்த்த விரோத நாடகத்தின் சொல்லாடல் பகுதி மோடிமைப் பாங்கானதாகவும், மிகைப்படுத்தப்பட்டதாகவும் காணப்படுகின்றது.
- நாடக ஆசிரியர் கூறவிளையும் செய்தி சொல்லாடலுக்கு ஊடாகவே பார்ப்போரை முழுமையாகச் சென்றடைகின்றது.

- சொல்லாடலில் பல்வேறு அரங்கியல் அம்சங்கள் உட்பொதிந்திருக்கும். உதாரணமாக,
  - நடிப்பு
  - செயலியக்கம்
  - பாத்திரப்பண்பு
  - உணர்வு
  - கருத்து
  - காட்சிவிதானிப்பு
  - வேடஉடை
  - ஒப்பனை
  - மேடைக்குறிப்பு
  - களம்
  - கைப்பொருள்
  - மேடைப்பொருள்
  - இசை
  - ஒலி
  - ஒளி

- சொல்லாடலின் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்
  - பாத்திரங்கள்
  - பாத்திரப்பண்புகள்
  - தொனி
  - ஏற்றஇறக்கம்
  - அழுத்தம்
  - வீச்சு
  - ஒலிக்குறிப்பு
  - மோடி
  - உணர்வு
  - செயலியக்கம்
  - மேடைக்குறிப்பு
  - உச்சரிப்பு
  - மொழி
  - புறத்தெறிகை

- சொல்லாடலுக்கு குரற்பயிற்சி அவசியமாகும்.

## சுதேச வாழ்வியற் சடங்குகள்

- எமது சமூகத்தில் காணப்படுகின்ற பல்வேறு சமூகவியற் சடங்குகளில் திருமணச்சடங்குகள், மரணச்சடங்குகள் என்பனவும் ஒன்றாகும்.

- இந்து சமயம் சார்ந்த திருமணச்சடங்கொன்றினை நிகழ்த்தும் செயலொழுங்கு பின்வருமாறு,
  - கன்னிக்கால் நடுதல்
  - கும்பம் வைத்தல்
  - பூசை தொடங்குதல்

- மணமகன் தோழனால் அழைத்துவரப்படுதலும், அவருக்குரிய பூசையும்
- மணமகள் அழைத்துவரப்படுதல்
- இருவருக்குமான சடங்கு (யாக பூசை)
- பெண்ணுக்குரிய சீர்கள் பரிமாறப்படுதல்
- தாலி,கூறைச்சேலை என்பவற்றுக்கு ஆசிபெறப்படுதல்
- மணமகன் பெண்ணுக்குரிய சீர் வழங்குதல்
- தாலி கும்பத்தில் வைத்து பூசை செய்யப்படுதல்
- மணமகனும் மணமகளும் உடை மாற்றிவருதல்
- தாலி கட்டும் மந்திரம் ஓதலும்,தாலி கட்டுதலும்
- கும்பத்தினை மூன்று முறை வலம்வருதல் (தீவலம்)
- அம்மி மிதித்து மெட்டி அணிதல்
- செம்புக்குள் மோதிரம் தேடுதல்
- பொட்டு,பழம் கொடுத்தல்
- அருந்ததி பார்த்தல்
- பெரியவர்கள் ஆசி வழங்குதல்
- விருந்து

➢ கிறிஸ்தவ சமயம் சார்ந்த திருமணச்சடங்கொன்றினை நிகழ்த்தும் செயலொழுங்கு பின்வருமாறு,

- மணமகன் தோழனாலும், மணமகள் தோழிகளாலும் தேவாலயத்திற்கு அழைத்து வரப்படுதல்
- குருவானவர் மணமக்களை வரவேற்று ஆசிவழங்குதல்
- இருவரும் உரிய இடத்தில் அமர்தல்
- திருப்பலி ஆரம்பித்தல்
- வேதாகமத்திலுள்ள திருமண நற்செய்தி வாசிக்கப்படுதல்
- திருமணவார்த்தைப்பாடு கேட்டலும், மணமக்கள் பதிலளித்தலும்
- தாலி அல்லது மோதிரம் ஆசீர்வதிக்கப்படுதல்
- தாலி கட்டுதல். ஒரே நேரத்தில் கோயில் மணிகள் ஒலித்தல், தூய ஆவியின் பாடல் பாடப்படுதல்
- மாலை மாற்றுதல்
- திருப்பலி தொடர்தல்
- காணிக்கை வழங்குதல்
- நற்கருணை வழங்குதல்
- திருப்பலி நிறைவில் பெரியோர் வாழ்த்துதல்
- பெண் வீட்டிற்கு அழைத்து வருதல்
- கேக் வெட்டுதல்
- கூறைச்சேலை ஆசி வழங்குதல்
- கூறைச்சேலை மாற்றுதல்
- விருந்துண்ணலும், வாழ்த்துதலும்

➢ மரணச் சடங்கில் இடம்பெறும் செயலொழுங்கு பின்வருமாறு,

- இறந்தவரை நீராட்டி அவரை அலங்கரித்தல்
- பூசை செய்தல்
- குழுவாக சேர்ந்து அழுதல்

- கும்பம் வைத்தல்
- பிள்ளைகள்/ சகோதரர்கள் மொட்டை அடித்து, தர்ப்பை தரித்து பூசையில் ஈடுபடுதல்
- சுண்ணம் இடித்தல்
- திருப்பொற் சுண்ணம் பாடுதல்
- ஒப்பாரி பாடுதல்
- சடலத்திற்கான கிரியைகளின் நிறைவில் உறவினர் ஒப்புச் சொல்லி அழுதல்
- பெருத்த அழும் ஓசையோடு சடலத்தினைக் கொண்டு செல்லல்
- ஊர்வலம்
- தகனம் செய்யும் கிரியைகள்

➢ கிறிஸ்தவ அல்லது இஸ்லாமிய மரணச் சடங்குகளில் பின்பற்றப்படும் செயல்கள், செயலொழுங்குகள் வேறுபட்டிருக்கும்.

➢ மரணச் சடங்கில் காணப்படக்கூடிய நாடகப் பண்புகள்,
  - மரித்தவர் ஒரு பாத்திரமாகச் ''சவம்'' ''சடலம்'' ''பிரேதம்'' ''பூதவுடல்'' போன்ற பெயர்களில் அவரது சொந்தப் பெயரைத் தவிர்த்து அழைக்கப்படுதல்
  - மரித்தவர் அலங்கரிக்கப்படுதல்
  - அவருக்குச் செய்யப்படுகின்ற கிரியைகள்
  - பிள்ளைகள்/ சகோதரர்கள் பாத்திரங்களைப் போல நோக்கப்படுதல்
  - உணர்ச்சியைத் தூண்டுகின்ற உறவுகளின் கதறல்
  - ஒப்பாரிப் பாடல்கள்
  - அழுபவரைப் பார்த்து அழும் எதிர் விளைவுகள்
  - பறை போன்ற இசைக்கருவிகள்
  - ஊர்வலம்

## துணைக்கலைகள்

➢ நாடகமொன்றை நிகழ்த்துவதற்குத் துணைக் கலைகள் இன்றியமையாதவையாகும்.

➢ துணைக்கலைகள் என்பவை நடிகன் தனது பாத்திரப்பண்பை வெளிப்படுத்த துணைசெய்வனவாகும். அவை நடிகனின் புறவாரியான நடிப்பிற்கு அழுத்தம் கொடுப்பவையாகும்.

➢ நடிகனது நடிப்பிற்குத் துணைபுரிகின்ற கலைகள் துணைக்கலைகளாகும்.

➢ துணைக்கலைகள் நாடக வகைக்கு ஏற்பவே அமைந்திருக்கும்.

➢ நடிகனைக் குறித்ததொரு கால, இட சூழமைவில் வைத்துப் பார்ப்பதற்குத் துணைக்கலைகள் வசதி செய்கின்றன.

- ஒரு நாடகத்தின் துணைக்கலைகளாக பின்வருவன காணப்படுகின்றன.
    - வேடஉடை
    - ஒப்பனை
    - அணிகலன்கள்
    - கைப்பொருட்கள்
    - மேடைப்பொருட்கள்
    - தட்டுமுட்டுக்கள்
    - இசையும் சத்தங்களும்
    - நடனம்
    - ஒளி
    - காட்சிவிதானிப்பு

- நாடக மோடியின் தன்மைக்கேற்ப அதில் பயன்படுத்தப்பெறும் துணைக்கலைகளின் தன்மையும் வேறுபடும். உதாரணமாக
    - யதார்த்தப்பாங்கான நாடகத்தில் பயன்படுத்தப்பெறுகின்ற துணைக்கலைகள் ஒவ்வொன்றும் வாழ்க்கையை ஒத்ததாகவும் இயல்புப்பாங்கானதாகவும் அமைந்திருக்கும்.
    - யதார்த்த விரோதப்பாங்கான நாடகத்தில் பயன்படுத்தப்பெறுகின்ற துணைக்கலைகள் ஒவ்வொன்றும் வாழ்க்கையை ஒத்ததாகவோ இயல்புப்பாங்கானதாகவோ அமையாது அதிலிருந்து சற்று வேறுபட்டதாக, மோடிமைப்பண்புடன் கூடியதாகக் காணப்படும்.
    - வரலாற்று நாடகத்தைப் பொறுத்தவரையில் பயன்படுத்தப்பெறுகின்ற துணைக்கலைகள் நாடகக் கதை விவரிக்கும் வரலாற்றுக் காலத்தைப் பிரதிபலிப்பனவாகக் காணப்பெறும்.

- நாடகத்தில் பிரயோகிக்கின்ற துணைக்கலைகள் ஒவ்வொன்றும் ஒன்றுடனொன்று ஒத்திசைவானதாகவும், சமநிலைத் தன்மையுடையதாகவும், கருப்பொருளுடன் நெருங்கிய தொடர்புடையதாகவும் காணப்பெறுதல் வேண்டும்.

- நாடக எழுத்துருவை அடிப்படையாகக் கொண்டு துணைக்கலைகளைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்ற அம்சங்களாவன,
    - நாடகமோடி.
    - கதைக்காலம்.
    - கரு.
    - பாத்திரங்கள்.
    - பாத்திரப்பண்புகள்.

- எழுத்துருவை அடிப்படையாகக் கொண்டு அதில் துணைக்கலைகளின் பயன்பாட்டை நாம் இனங்கண்டறிவதற்கு பின்வரும் அம்சங்கள் உதவுகின்றன,
    - மேடைக்குறிப்பு
    - சொல்லாடல்
    - பாத்திரச்செயலியக்கம்

## நாடகமோதுகை

- யாதாயினும் ஒரு விடயம் தொடர்பில் ஏற்படுகின்ற எதிரெதிர் நிலைகள், ஒன்றுக்கொன்று முரணான நிலைப்பாடுகளே மோதுகையாகும்.

- மனித வாழ்க்கையில் பல்வேறு மோதுகைச் சந்தர்ப்பங்கள் எழுகின்றன. அவை பின்வருமாறு அமைகின்றன.
    - உடல் சார்ந்த மோதுகை
    - உளம் சார்ந்த மோதுகை
    - மனிதனுக்கும் சமூகத்திற்குமான மோதுகை
    - மனிதனுக்கும் கடவுளுக்குமான மோதுகை
    - மனிதனுக்கும் பிரபஞ்சத்திற்குமான மோதுகை
    - மனிதனுக்கும் இயற்கைக்குமான மோதுகை

- மோதுகை நிலைச் சந்தர்ப்பங்கள் மனித வாழ்க்கையில் குடும்பம், பாடசாலை, ஆலயம், சந்தை, வகுப்பறை, விளையாட்டு மைதானம் போன்ற இன்னோரன்ன இடங்களில் ஏற்படலாம்.
- மனித வாழ்க்கையினையே நாடகம் சித்திரிப்பதனால் நாடகத்தில் மோதுகை முதன்மை பெறுகின்றது. இதனாலே தான் நாடகம் என்பது மனிதனை அவனது மோதுகை நிலையில் சித்திரிப்பதும் நாடகம் முரண்பாடுகளின் கதை எனவும் கூறப்படுகின்றது.
- நாடகத்தில் மோதுகையின் அவசியமான பண்புகள்,
    - நாடகத்தின் கருப்பொருளை விளங்கிக் கொள்ள.
    - பாத்திரப்பண்பை அறிந்து கொள்ள.
    - பாத்திர செயல் நிலைகளைக் கண்டு கொள்ள.
    - பார்ப்போரது ரசனையைத் தூண்டிவிட.
    - கதையை வேகமாக நகர்த்த.

## வரலாற்று நாடக எழுத்துரு ஆக்குதல்

- நாடக ஆற்றுகையின் கதை, செயல்நிலை, படிமம், துணைக்கலைகளின் பிரயோகமுறைமை என்பவற்றை எழுத்தாக்க முறையில் கொண்டு வருதல் எழுத்துரு எனப்பெறும்.
- எழுத்துருவை எழுதுபவரை நாடக ஆசிரியர் என அழைப்பர்.
- எழுத்துருவில் காணப்படும் அம்சங்களாவன,
    - கதை.
    - கதைக்கரு.
    - மேடைக்குறிப்புக்கள்.
        - நடிப்பிற்கான குறிப்புக்கள்.
        - ஒளியமைப்புக் குறிப்புக்கள்.
        - காட்சியமைப்புக் குறிப்புக்கள்.
        - இசைக் குறிப்புக்கள்.

- சூழமைவு.

- மொழி.
  - உரையாடல்
  - தனிச்சொல்
  - காட்சிப்படிமங்கள்
  - கதைப்பின்னல்கள்
  - பாத்திரங்கள்

- மோதுகை

➢ வரலாற்றுக் கதைகளை நாடகமாக்கும் போது அக்கதைகளின் அடிநாதமாகவுள்ள சிந்தனையை மாற்றாது, நுட்பங்களைப்பயன்படுத்தி நாடக எழுத்துரு எழுதுதல் வேண்டும். உதாரணமாக :- வெடியரசன் கதை, யாழ்ப்பாணன் / யாழ்பாடி போன்ற வரலாற்றுக்கதைகளை எழுத்துருவாக எழுதிப்பழகலாம்.

➢ வரலாற்றுக் கதைகளை நாடகமாக்கியபின் அவற்றுக்குப் பொருத்தமான காட்சிவிதானிப்புமாதிரி, மேடைப்பொருட்கள்மாதிரி, கைப்பொருட்கள்மாதிரி, வேடஉடைகள்மாதிரி, அணிகலன்கள், ஒளிமுதல்மாதிரிகள் போன்றவற்றை செய்தல் வேண்டும்.

➢ வரலாற்று நாடகத்திற்கான துணைக்கலைகளைத் திட்டமிடும் போது அந்நாடகத்தின் காலம், இடம், சூழல், சம்பவங்கள், அவற்றின் சமூகப்பொருளாதாரநிலை, மோடி போன்ற பல்வேறு விடயங்களைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

➢ வரலாற்று நாடகத்தினை ஆற்றுகை செய்யும் போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துதல் வேண்டும்.
  - பெரும்பாலும் செம்மொழி பயன்படுத்தப்படுவது இயல்பு.
  - வரலாற்றுக் கதைகளைத் தழுவி அமைந்திருக்கும்.
  - பெரும்பாலும் பகட்டு ஆடம்பரம் நிறைந்த வேடஉடை, ஒப்பனையைக் கொண்டிருக்கும்.
  - உணர்ச்சி கொப்பளிக்கும் சொல்லாடல்கள் பெரிதும் வீர உணர்வு நிறைந்தவையாய் இருக்கும்.
  - மிகைப்படுத்தப்பெற்ற உடலசைவுகள், நடிப்புமுறைகள், பெருங்காட்சிப்பண்பு என்பவற்றைக் கொண்டிருக்கும்.
  - பெரும்பாலும் அடுக்குமொழி கொண்ட சொல்லாடல்களால் அமைந்திருக்கும்.

## புதிதளித்தல்

- விசேட ஆயத்தங்கள், ஒத்திகைகள், எதுவுமின்றி உடனடியாகச் செய்யப்படும் செயற்பாடு புதிதளித்தல் எனப்படும்.
- புதிதளித்தல்கள் தனியாகவும், கூட்டாகவும் செய்யப் பெறலாம்.
- புதிதளித்தல்களை சூழமைவுகள், நிகழ்ச்சிகள், பொருள்கள், பாத்திரங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளலாம்.
- புதிதளித்தல் மூலம் ஒருவரிடம் பின்வரும் பண்புகள் வளர்த்தெடுக்கப்படுகின்றன.
    - கற்பனைத் திறன்.
    - தொடர்பாடல் திறன்.
    - படைப்பாற்றல் திறன்.
    - சரியாகத் தீர்மானம் எடுக்கும் திறன்.
    - உடனடியாகத் தொடங்கும் ஆற்றல்.
- வரலாற்று நாடகங்களை புதிதளித்தல் நுட்பங்களை கையாண்டு நடிக்கும் அனுபவத்தை பெறுதல் வேண்டும்.

## விதைந்துரைக்கப்பட்ட நாடக எழுத்துரு-சங்கிலி

- இந் நாடக ஆசிரியர் பேராசிரியர் கந்தசாமி கணபதிப்பிள்ளை.
- உடையார் மிடுக்கு, முருகன் திருகுதாளம், கண்ணன் கூத்து, நாட்டவன் நகர வாழ்க்கை. பொருளோபொருள், தவறான எண்ணம், சுந்தரம் எங்கே, சங்கிலி, துரோகிகள் போன்றவை இவரது நாடகங்களாகும்.
- இவரது சங்கிலி நாடகம் ஒரு வரலாற்று நாடகமாகும்.
- இந் நாடகம் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவில் அரங்கேற்றுவதற்காக கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்டது.
- இந் நாடகம் இயல்பு மொழிவாத மோடியில் அமைந்த நாடகமாகும்.
- இந் நாடகத்தின் கரு தேசப்பற்றாகும்.
- இந் நாடகத்தின் பிரதான மோதுகையாக சங்கிலிக்கும் அப்பாமுதலிக்கும் இடையிலான முருகல் நிலைப்பாடு ஆகும்.
- இந் நாடகத்தில் நீண்ட பட்டியல் கொண்ட பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. இருப்பினும் முக்கிய பாத்திரங்களாக பின்வருவோர்காணப்படுகின்றனர்
    - சங்கிலி
    - அப்பாமுதலி
    - வீரமாப்பாணர்
    - இமையாணன்
    - இராசமாதேவி
    - வடிவழகி
    - பறங்கியர்

- இந் நாடகத்தில் காட்சிகள் அமைக்கப்பட்டிருக்கும் இடங்கள்
  - யாழ்ப்பாணத்து அரசன் அவைக்களம்
  - அரசன் அவைக்களத்து வாசற்புறம்
  - அப்பாமுதலி வீட்டுப்பூங்கா
  - அப்பாமுதலி வீடு
  - நல்லூர்த் தெரு
  - பறங்கியர் கோட்டை
  - நல்லூர் கோட்டையின் மேற்கு வாசற்புறமஸ
  .

- சங்கிலியும் அப்பாமுதலியுமே பிரதான எதிர்நிலைப் பாத்திரங்களாவர்.

- இந் நாடகத்தின் சொல்லாடல் யதார்த்த நிலைச் சொல்லாடல் பாங்கில் அமைந்தது.

- இலக்கிய நடையும், பேச்சு நடையும் பொருந்தியது.
  - இலக்கிய நடை :- அரசவை உரையாடல்.
  - பேச்சு நடை :- சண்முகம், கந்தையா, உதுமான் உரையாடல்

- இந் நாடகம் மூன்று உறுப்புக்களைக் கொண்டுள்ளது.
  - முதலாம் உறுப்பு - 4 களம்
  - இரண்டாம் உறுப்பு - 6 களம்
  - மூன்றாம் உறுப்பு - 6 களம்

- இந் நாடகத்தின் கதை வரலாறு தழுவியதாகும். யாழ்ப்பாணத்தரசன் பரராசசேகரன் மகனாகிய செகராசசேகரன் என்னும் சிங்காசனப் பெயருடன் நாட்டை ஆண்ட முதற் சங்கிலி கி.பி 1514 முதல் கி.பி 1565 வரை ஆட்சி புரிந்தான். அவனது கதையே நாடகமாக்கப்பட்டது. சங்கிலியன் மன்னனுக்கு அரசாட்சி கையளிக்கப்பட்டதன் பின் அவனது வீரம், புகழ், தேசப்பற்றுக் காரணமாக உறுதியாக நாட்டை ஆண்டு வந்தான். ஆயினும், இவனது ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென அவனது அரண்மனையைச் சேர்ந்த அப்பாமுதலியார் சூழ்ச்சிகள் பல செய்து ஆட்சியைக் கவிழ்க்க முற்படுகின்றான். இமையாணன், வீரமாப்பாணன் துணையோடு சங்கிலி அனைத்தையும் எதிர்கொண்டு நாட்டைக் காப்பாற்றுகின்றான். பின்னர், தன் காலம் முதல் தன் மகன் புவிராச பண்டாரத்திடம் ஆட்சியை ஒப்படைக்கின்றான்.

## நாடகமோடி

- நாடகமோடி என்பது நாடகம் நிகழ்த்தப்படும் முறையைக் கொண்டு வகுக்கப்படுவதாகும்.
- மோடியைப் பாணி எனவும் குறிப்பிடுவர்.
- தொல்காப்பியர் மோடியை
    - 1.நாடகவழக்கு (யதார்த்த விரோதம்)
    - 2.உலகியல்வழக்கு (யதார்த்தம்) எனவும்
- பரத முனிவர் மோடியை
    - 1. லோகதர்மி (யதார்த்தம்)
    - 2.நாட்டியதர்மி (யதார்த்த விரோதம்) எனவும் மோடிகளை வகைப்படுத்தியுள்ளனர்.
- நவீன நாடக வரலாற்றில் பிரதானமாகப் பேசப்பெறும் இரண்டு மோடிகள் பின்வருமாறு
    - யதார்த்தமோடி
    - யதார்த்தம் அல்லாதமோடி

- **யதார்த்தமோடி**

  வாழ்க்கையலுள்ள விடயங்களைத் தெரிந்தெடுத்து உள்ளவாறே அவற்றைத் தொகுத்தெடுத்து கலாபூர்வமாக அரங்கியல் பண்புகளுடன் அளிக்கை செய்வதாகும்.
    - யதார்த்த மோடியின் அளிக்கைப் பண்புகள்.
        - வாழ்க்கையை ஒத்ததாக காணப்படும்.
        - சமகால வாழ்வின் விடயங்கள் நாடகத்தின் கருப்பொருட்களாகக் காணப்படும்.
        - இயல்புத் தன்மை வாய்ந்ததாக காணப்படும்.
        - வேடஉடை, ஒப்பனையில் பாத்திரத்தின் இயல்பு நிலை சார்ந்ததாக காணப்படும்.
        - பிரதிநிதித்துவப் பாங்கான காட்சியமைப்புக் காணப்படும்.
        - உடல், குரல் வெளிப்பாடுகள், உணர்வுசார் செயற்பாடுகள், அசைவுகள் யாவுமே வாழ்க்கையில் உள்ளதை ஒத்ததாகக் காணப்பெறும்.
        - கதை ஒன்று தொடர்ச்சியாகக் காணப்படும். உதாரணம் :- எந்தையும் தாயும்
        - யதார்த்த மோடிக்கு வலு சேர்ப்பதாக ஒளிவிதானிப்பு, இசை என்பன பயன்படுத்தப்பெறும்.
        - பாத்திரமாக வாழுதல் இதன் நடிப்பு நுட்பமாகும்.
    - யதார்த்தமோடி நாடகங்களிற்கு உதாரணம்,
        - எந்தையும் தாயும்
        - பொருளோபொருள்
        - உறவுகள்
        - ஒரு பாவையின் வீடு
        - செரிப்பழத்தோட்டம்
        - தலைமைக் கட்டிடக்காரன்
        - நாட்டவன் நகர வாழ்க்கை

- **யதார்த்தம் அல்லாதமோடி**
  வாழ்விலிருந்து வேறுபட்டதும், மோடிமைப்படுத்தப்பட்டதுமான வடிவமாகும்.
    - யதார்த்தமல்லாத மோடிகள் பலவுள்ளன. அவையாவும் யதார்த்தத்திலிருந்து வேறுபடுவன.
    - யதார்த்தமல்லாத மோடி வடிவங்கள்
        - கற்பிதவாதம்
        - மிகைப்பாட்டுவாதம்
        - காவியப்பாணி
        - அபத்தம்
        - கூத்து
        - இசைநாடகம்
    - யதார்த்தமல்லாத மோடியின் அளிக்கைப் பண்புகள்
        - வரலாற்றுக்கதைகள், புராணஇதிகாசக்கதைகள், கற்பனைக்கதைகள், கதைப்பொருட்களாகப் பயன்படுத்தப்படும்.
        - பல்வேறு கதைகளின் தொடர்ச்சிகள், இணைவுகள் காணப்பெறும். உதாரணம் :- விழிப்பு
        - ஆடல், பாடல், மிகைநடிப்பு, பாடகர்குழு, வேடமுகப்பாவனை எனப் பல அம்சங்கள் அடங்கியிருக்கும்.
        - வேடஉடை, ஒப்பனை, காட்சிவிதானிப்பு, ஒளிவிதானிப்பு, இசைவிதானிப்பு போன்ற விடயங்களில் குறியீட்டுத் தன்மை காணப்பெறும்.
        - பாத்திரமாக நிகழ்த்திக்காட்டுதல் இதன் நடிப்பு நுட்பமாகும்.
    - யதார்த்த விரோத நாடகங்களிற்கு உதாரணம்
        - கண்டறியாத கதை
        - அரசனின் புத்தாடை
        - விழிப்பு
        - மழை
        - இராவணேசன்
        - அன்ரிகனி
        - புதியதொரு வீடு
        - வெண்கட்டி வட்டம்

## கூத்துக்கள்

- கூத்து என்பது ஆடல், பாடல் எடுத்துரைப்பினூடாகக் கதை சொல்லுகின்ற ஒரு நாடகவடிவமாகும்.
- கூத்து என்பதனை “ஆடல்” என்றும் பொருள்படக் கூற முடியும்.
- கூத்து என்பது “குதி” என்ற வினைச் சொல்லின் அடியாகத் தோன்றியது என்பர்.
- நாடகம் என்பதற்கு வழங்கப்பெற்ற பழந்தமிழ்ச் சொல்லே கூத்து ஆகும்.
- தமிழ் நாட்டின் தேசிய நாடக வடிவமாக தெருக்கூத்துக் காணப்படுகின்றது.

- மரபுவழிக்கூத்தின் பிரதான அம்சங்கள்
    - ஆடல்/ அசைவு
    - பாடல்
    - ஊட்டு வசனங்கள்/ சொற்கள்
    - மோடியுற்ற எடுத்துரைக்கும் பாங்கு
    - நடிப்பு
    - சபையோரால் கூத்து நகர்த்தப்படல்

- மரபுவழிக்கூத்தின் ஆற்றுகைப் பண்புகள்
    - கூத்தில் பாத்திரங்கள் சபையோரால் அன்றேல் கட்டியகாரனால் அன்றேல் பாத்திரங்கள் தம்மைத்தாம், என அறிமுகம் செய்யப்படுகின்றன.
    - ஐதீகம் சார்ந்த கதைப்பொருள் பிண்ணனியாக அமைந்திருக்கும்.
    - கதை சொல்லப்படும் முறையானது எடுத்துரைக்கும் பாங்கிலமைந்திருக்கும்.
    - ‘‘அண்ணாவியார்’’ என அழைக்கப்படுபவராகக் கூத்தின் நெறியாளர் காணப்படுவார்.
    - அரங்கவெளி பெரும்பாலும் சுற்றிவரப் பார்ப்போர் நின்று, அமர்ந்து பார்க்கின்ற தன்மையில் வட்டமான வெளியாகக் காணப்படுகின்றது (வட்டக்களரி).
    - பாத்திர வெளிப்பாடானது ஆடல், பாடல், உரையாடல் இணைந்த மோடியுற்ற பாங்குடன் காணப்படும்.
    - அண்ணாவியார், பிற்பாட்டுப்பாடுபவர், சல்லரி இசைப்பவர், மத்தளம் வாசிப்பவர், ஏடுபடிப்பவர் உள்ளிட்ட ‘‘சபையோர்’’ எனப்படும் குழுவினர் கூத்துக்களை நகர்த்திச் செல்வதில் முக்கிய பங்களிப்பைச் செய்வார்கள்.
    - சல்லரி, தோற்கருவிகள் (மத்தளம், பறை, உடுக்கு, தப்பு, மிருதங்கம்) பிரதான இசைக்கருவிகளாகப் பயன்படுத்தப்படும்.

- கூத்துக்கலை ஒரு கலை மரபாக அழைக்கப்பெற்றாலும் இதில் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. உதாரணமாக,
    - கதை தழுவி வரும் கூத்துக்கள் :- தென்மோடிக்கூத்து
    - கதை தழுவாத கூத்துக்கள் :- பறைமேளக் கூத்து
    - வரன்முறையான ஆடல்களைக் கொண்ட கூத்துக்கள் :- மட்டக்களப்பு வடமோடி
    - வரன்முறை ஆடலற்ற கூத்துக்கள் :- காத்தவராஜன் கூத்து
    - வரையறுக்கப்பட்ட வெளியில் ஆடப்பெறும் கூத்துக்கள் :- தென்மோடி
    - வரையறுக்கப்படாத வெளியில் ஆடப்பெறும் கூத்துக்கள் :- காமன் கூத்து
    - இந்து சமயம் சார்ந்த கூத்துக்கள் :- காத்தவராஜன் கூத்து
    - கிறிஸ்தவ சமயம் சார்ந்த கூத்துக்கள் :- தென்பாங்கு

➢ கூத்தில் சமூகத்தினர் தமக்கான பொறுப்புக்களை ஏற்றுச் செயற்படுகின்றனர்.
  - களரி அமைப்பவர்கள்
  - களரி அலங்காரம் செய்பவர்கள்
  - உணவு கொடுப்பவர்கள்
  - வேடஉடை தயாரிக்க உதவுபவர்கள்
  - சேர்ந்து பாடுபவர்கள்
  - ஒளி வகைகளைப் பெற்றுக் கொடுப்பவர்கள்
  - ஊர்களிற்கு அறிவிப்பவர்கள்
  - நடிகர்களை ஏற்பாடு செய்து கொடுப்பவர்கள்

➢ கூத்துக்களில் பாத்திரங்களின் வரவானது பின்வரும் மூன்று முறைகளில் அறிமுகம் செய்யப்படுகின்றன.
1. சபையோரால் அன்றேல் அண்ணாவியரால் சபைவிருத்தம், சபைத்தரு மூலம் அறிமுகம் செய்யப்படுதல்.
2. கட்டியகாரனால் அறிமுகம் செய்யப்படுதல்.
3. குறித்த பாத்திரம் தன்னைத்தானே அறிமுகம் செய்தல்.

## மரபுவழிக் கூத்துக் கலைஞர்கள்

**பூந்தான் யோசேப்பு**

- யாழ்ப்பாணம் சுண்டுக்குழியைச் சேர்ந்த அண்ணாவியாராவார்.
- யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து மரபின் வளர்ச்சியில் பெரும் பங்களிப்புச் செய்த கலைஞராவார்.
- ‘‘ராஜபாட்’’ பாத்திரங்களை மிகச் சிறப்பாக நடிக்க வல்லவராவார்.
- சங்கிலியன், கருங்குயில், குன்றத்துக்கொலை, விசயமனோகரன், ஞானசௌந்தரி, எஸ்தாக்கியார், தேவசகாயம்பிள்ளை, மனம்போல்மாங்கல்யம், மரியதாசன் போன்ற பல கூத்துக்களை நடித்தும் நெறிப்படுத்தியும் வந்துள்ளார்.
- இவர் யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து மரபின் வளர்ச்சியில் ஆற்றிய பணிகள் பின்வருமாறு,
  - ‘‘நவரச நாட்டுக் கூத்துக்கலாமன்றம்’’ என்ற ஒன்றினை உருவாக்கி, எல்லாக் கிராமங்களிலும் இருந்த அண்ணாவியார், கூத்துக் கலைஞர்களை ஒன்றிணைத்துக் கூத்துக்கலை வளர்ச்சியடையக் காரணமானார்.
  - கூத்துக் கலைஞர்களிடையே ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றைப் பேணி கூத்தினைக் கௌரவத்திற்கு உரியதாக்கினார்.

- விசயமனோகரன், எஸ்தாக்கியார், தேவசகாயம்பிள்ளை, மனம்போல்மாங்கல்யம், மரியதாசன் போன்ற நூல்கள் பதிப்புப் பெற காரணமாக இருந்தார்.
- முதன்முதலாக பாடசாலை மாணவர்களுக்கு கூத்துக்களைப் பயிற்றுவித்து பாடசாலை மட்டத்தில் கூத்து வளர்ச்சியுற ஒரு தொடக்கமாக இருந்தார்.
- கூத்தில் நேரச் சுருக்கம், ஹார்மோனிய இசைக்கருவிப்பயன்பாடு, நடிப்பிற்கு முக்கியத்துவமளித்தல், நேர்த்தியுடன் கூத்தினை மேடையேற்றுதல், பெண் பாத்திரங்களை பெண்களேயேற்று நடித்தல் போன்ற முற்போக்கான செயற்பாடுகளினால் கூத்தின் சிறப்பிற்கும் காரணமானார்.
- இலங்கை வானொலியில் தென்மோடிக் கூத்து ஒலிபரப்பப்பெற்று பரவலடைவதற்கும் காரணியாகச் செயற்பட்டார்.

**நாகமணிப்போடி**

- மட்டக்களப்பு கன்னன் குடாவைப் பிறப்பிடமாகக் கொண்ட அண்ணாவியார் ஆவார்.
- சீனித்தம்பி அண்ணாவியாரிடம் கூத்துப் பயின்ற இவர் வடமோடி, தென்மோடிக் கூத்துக்களின் இலக்கணங்களை நன்கறிந்த கலைஞராவார்.
- மாடுபிடி சண்டை இவரால் எழுதப் பெற்று நெறியாள்கை செய்யப்பட்ட கூத்தாகும்.
- அல்லி நாடகம், குருகேத்திரன் போர், சாம்பேந்திரன் நாடகம் போன்ற பல கூத்துக்களை நெறியாள்கை செய்துள்ளார்.
- சிறந்த சாரீர வளமும், நடிப்புத்திறனும், மத்தள வாசிப்புத் திறனும், ஆடல் திறனும் ஒருங்கே அமைந்தவராக இருந்தார்.
- கன்னன் குடாவில் தென்மோடிக் கூத்து மரபின் இருப்பிற்குக் காரணமாக இருந்தார்.
- வடமோடி, தென்மோடி ஆகிய இரு வகைகளினதும் வேறுபாடுகளை துல்லியமாக அறிந்தவராகவும் அதனைச் சந்ததிக்குக் கடத்துகை செய்தவராகவும் உள்ளார்.

**அப்புக்குட்டி முருகவேள்**

- யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அண்ணாவியார் ஆவார்.
- இவர் சிறு வயதிலிருந்தே கூத்துக்களில் ஏடுபிடிப்பவராகவும், பிற்பாட்டுப் பாடுபவராகவும், நடிகராகவும், அண்ணாவியராகவும் பணிகளை மேற்கொண்டுள்ளார்.
- இவர் கண்டியில் ஆசிரியராக கடமையாற்றிய போதும் வட்டுக்கோட்டையிலும் பல கூத்துக்களை நெறிப்படுத்தி மேடையேற்றினார்.

- வட்டுக்கோட்டையில் முதலில் ‘‘பாலர் கலைவளர்ச் சங்கம்’’ என்ற ஒன்றினையும், பின்னர் ‘‘வட்டுக்கோட்டை அபிவிருத்திக் குழு’’ என்ற அமைப்பையும் உருவாக்கி அதனூடாக கூத்துக்கலையும், கிராமியக் கலைகளும் வளர்வதற்குப் பெரும் ஊக்க சக்தியாகத் திகழ்ந்தார்
- கிராமத்திலிருந்து வழக்கொழிந்து போன கூத்துக்களின் ஏட்டுப் பிரதிகளைத் தேடி அவற்றினை பாடம் பண்ணிப் பேணியதுடன் அவற்றினைச் சுருக்கியும், பகுதிகளாக்கியும் நாடகத் தன்மையுடன் மேடையேற்றுவதற்கு உதவினார்.
- கூத்தின் மரபு கெடாது ஆடல், பாடல், வேடஉடை ஒப்பனை, இசை, வெளி போன்ற அம்சங்களில் கண்டிப்பான ஒழுங்குகளைக் கடைப்பிடித்து வந்தார்.
- தர்மபுத்திரன் நாடகம், விராட நாடகம், குகேந்திரன் நாடகம், கீசகன் வதை, மல்லன் மடையன் போர் போன்ற பல கூத்துக்களை நெறிப்படுத்தியுள்ளார்.

**குழந்தை செபமாலை**

- மன்னாரில் முருங்கனைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.
- இவர் நடிகனாக, நாடக ஆசிரியராக, நெறியாளராக, அண்ணாவியராக, ஹார்மோனிய இசைக்கலைஞனாக போன்ற பல்வேறு தளங்களில் செயலாற்றியவர்.
- மன்னார் கூத்து மரபின் எழுச்சிக்குக் காரணமாக இருந்தவர்.
- ‘‘மன்னார் முத்தமிழக் கலாமன்றம்’’ என்ற ஒன்றினை உருவாக்கி அதற்கூடாக நாட்டுக் கூத்துக்களை மேடையேற்றினார்.
- 50 வருடங்களிற்கு மேல் இத்துறையில் ஈடுபட்டு வந்துள்ளார்.
- 30 ற்கும் மேற்பட்ட கூத்துக்ககளை எழுதி நெறிப்படுத்தியது மட்டுமன்றி, அதனை பல மாவட்டங்களிலும் கொண்டு சென்று மேடையேற்றினார்.
- இவர் யார்குழந்தை, வீரனை வென்ற தீரன், விடுதலைப் பயணம், நல்ல சமாரியன், உலகை மீட்ட உத்தமன், பூதத்தம்பி, கைமுனு, எல்லாளன், சாம்ராட் அசேகன் போன்ற கூத்துக்களை எழுதியுள்ளார்.
- இவர் எழுதிய கூத்துக்கள் இரண்டு தொகுதி நூல்களாக வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
    - 1. பரிசு பெற்ற நாடகங்கள் (1997)
    - 2. மரபு வழி நாடகங்கள் (1998)
- இவர் எல்லா வகையான கருப் பொருளிலும் கூத்துக்களையாக்கி மேடையேற்றியுள்ளார். (விவிலியக்கதை, புராணக்கதை, காப்பியங்கள், கற்பனைக்கதை, வரலாற்றுக்கதை, சமகால அரசியல்கதை, பிரசாரக்கதை)

## வசந்தன் கூத்து

- வசந்த காலத்தில் ஆடப்பெறுவதனாலும், இன்பத்தைத் தருவது என்ற பொருளை வெளிப்படுத்துவதனாலும் வசந்தன் கூத்து எனப் பெயர் பெறுகின்றது.
- ஆடலும், பாடலுமே இக் கூத்தில் பிரதானமாகும்.
- இக் கூத்திற்கென தனியான கதையமைப்பு இல்லை.
- ஆரம்பம், முரண்பாடு, வளர்ச்சி என்கின்ற கட்டமைப்பும் இக் கூத்தில் இல்லை.
- பாடல்களை அவற்றிற்குரிய சந்தர்ப்பங்களில் பாடியபடி கோலடித்து ஆடுவதே இதன் பண்பாகும்.
- வசந்தக் கூத்து ஆடப்படும் பிரதேசங்கள்
    - மட்டக்களப்பு
    - யாழ்ப்பாணம்
    - முல்லைத்தீவு
    - திருகோணமலை
    - அம்பாறை
- வசந்தன் கூத்து ஆடப்பெறுவதற்கான காரணங்கள்
    - மழை வேண்டி
    - நோய் தீர
    - நல்ல விளைச்சல் கிடைக்க
    - மகிழ்வு பெற
    - பொழுதுபோக்கிற்கு
    - நேர்த்திக்கு
    - சமூக ஒற்றுமைக்கு
    - அழகியல் திருப்திக்கு
    - உடல் புத்தெழுச்சிக்கு

- வசந்தன் கூத்துப் பாடல்கள் பாடப் பெறும் முறை பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடுகின்றன. அவை,
    - தெய்வங்களைப் புகழ்பவை
    - தனிமனிதர்களை வாழ்த்துபவை
    - வேடிக்கைத் தன்மையானவை
    - தொழில் சார்ந்தவை

- பிரதேசத்திற்குப் பிரதேசம் வசந்தன் கூத்துப் பாடல்கள் பாடப் பெறும் முறைகளிலும், நிகழ்த்தும் முறைகளிலும் வசந்தன் கூத்துக்கள் பெயர் பெறும் முறைகள்
    - பிள்ளையார் வசந்தன்
    - அம்மன் பள்ளு வசந்தன்
    - ஞான வேதியர் வசந்தன்
    - வேளாண்மை வசந்தன்
    - முசுற்று வசந்தன்
    - வீரபத்திரர் வசந்தன்

- வசந்தன்கூத்தின் ஆற்றுகைப்பண்புகள்
    - வட்டக்களரியில் ஆடப்படுகின்றது.
    - சிறிய தடிகளைத் தட்டி ஆடுதல்.
    - சிறுவர்களே அதிகம் ஆடுவர்.
    - 8 பேர் அன்றேல் 12 பேர் ஆடுவர்.
    - தலைப்பாகை, காலில் சதங்கை அணிந்து சரிகைச் சேலையினால் நீள் கொடுக்குக்கட்டி ஆடுதல்.
    - மத்தளம், சல்லரி முதன்மையான வாத்தியங்கள்.
    - கட்டியகாரன்,அண்ணாவியார் ஆகியோர் கூத்தினை நடத்திச் செல்வர்.

## ஈழத்தின் நவீன நாடக வளர்ச்சி

- ஐரோப்பியர் வருகையும் அதனால் ஏற்பட்ட ஆங்கிலக்கல்வியும், ஆங்கிலப்பாடசாலைகளும் அவை உருவாக்கிய மத்திய தர வர்க்கமும் காரணமாக தோற்றுவிக்கப்பெற்ற நாடக மரபே இலங்கையின் தமிழ் நவீன நாடக மரபாகும்.

- நவீன நாடக வளர்ச்சி கொழும்பு, யாழ்பாணம், மட்டக்களப்பு, மலையகம் போன்ற பிரதேசங்களில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியைப் பார்போம்.

## கொழும்பு

- ஈழத்தின் நவீன நாடகத்தின் தந்தையாகக் கருதப்படும் கலையரசு சொர்ணலிங்கத்தின் நாடகங்களும் சினிமாப்பாணியின் செல்வாக்கும் கொழும்பில் நவீன நாடக மரபைத் தோற்றுவித்தன.
- இயற்பண்பு வாய்ந்த காட்சியமைப்புக்கள், நடிப்பில் செம்மைப்பாடு போன்றன கலையரசு வழியாகத் தமிழ் நாடக உலகிற்கு அறிமுகமாயின.
- கணபதிப்பிள்ளையின் வருகை நவீன நாடக மரபை இயற்பண்பு சார்ந்ததாக மாற்றி அமைத்தது. உடையார் மிடுக்கு, தவறான எண்ணம், நாட்டவன் நகர வாழ்க்கை, கண்ணன் கூத்து, முருகன் திருகுதாளம், பொருளோ பொருள் என்பன இவ்வகையில் தயாரிக்கப்பட்ட இவரது நாடகமாகும்.
- உலகின் பிரசித்தி பெற்ற நாடகக்காரரின் நாடகங்களுடன் பரிச்சயமாதலையும் நாடகப் பயிற்சி பெறுதலையும் இப்பிரதேசம் சாத்தியமாக்கியது. இதன் வெளிப்பாடாகவே நடிகர் ஒன்றியத்தின் தோற்றம் அமைந்திருந்தது.
- சிவானந்தனின் விடிவை நோக்கி, காலம் சிவக்கிறது போன்ற நாடகங்கள் இப்பிரதேச நவீன வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

**யாழ்ப்பாணம்**

- கலையரசு சொர்ணலிங்கத்தினது அரங்கப் பிரவேசத்துடன் தொடக்கம் பெற்று, மேற்கத்தேய அரங்கத் தன்மைகளை உள்வாங்கி, புராண இதிகாசக் கதைகளை முதன்மையாகக் கொண்டு நாடகம் தயாரிக்கும் போக்கு ஆரம்பத்தில் காணப்பட்டது.

- பிற்பட்ட காலப்பகுதியில் சமூகப் பிரச்சினைகள், மண்வாசனை, சாதியமைப்புமுறை, சீதனம் போன்ற விடயங்களை உள்ளடக்கமாகக் கொண்டு நாடகங்கள் தயாரிக்கப்படலாயின. இதற்கு கணபதிப்பிள்ளையின் நாடகங்கள் சான்றாகும்.

- யாழ்ப்பாணத்தில் தீவிரமடைந்த சாதி, வர்க்க வேறுபாடுகளைத் தகர்த்தெறியும் நோக்கில் கந்தன்கருணை, ஏகலைவன், கோபுரவாசல் போன்ற ஆற்றுகைகளை மரபுசார்ந்த வடிவங்களிற்கூடாக நவீன நாடக உத்தி முறைகளை இணைத்துக் கொண்டு தயாரிக்கும் நிலை எழுந்தது.

- 1985 காலப்பகுதியில் மண்சுமந்த மேனியர் ஒற்றுமையினை மையப்படுத்தியும், உயிர்த்த மனிதர் கூத்து, பொய்க்கால் என்பன படிமங்களிற்கூடாக அரசியல், சமூகப் பிரச்சினைகளை முன்னெடுக்கும் போக்கிலும் தயாரிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து எந்தையும் தாயும், அன்னை இட்ட தீ என்பன மனித உளவியல் பிரச்சினைகளை வெளிக்கொணர்வனவாக அமைந்திருந்தன. குறிப்பாக யுத்தவடுக்களினால் பாதிக்கப்பட்ட மக்களது வாழ்க்கை முறையினைப் படம் பிடிப்பவையாக இவை அமைந்தன. இந் நாடகங்கள் அளிக்கை செய்யப்பட்ட முறை, கையாண்ட உத்திகள் நவீன நாடக மரபின் வளர்ச்சியினை இன்னொரு பரிமாணத்திற்கு இட்டுச் சென்றன.

- நவீன நாடக வளர்ச்சிப் போக்கில் குழந்தை ம.சண்முகலிங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட நாடக அரங்க கல்லூரியின் செயற்பாடுகளும், பாலேந்திராவினால் தோற்றுவிக்கப்பட்ட அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் செயற்பாடுகளும், திருமறைக் கலாமன்றத்தின் செயற்பாடுகளும், க.சிதம்பரநாதனின் அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் செயற்பாடுகளும், தே.தேவானந்தின் செயற்றிறன் அரங்க இயக்கத்தின் செயற்பாடுகளும் முதன்மையானதாகக் கருதப்படுகின்றன.

**மட்டக்களப்பு**

- மட்டக்களப்புப் பிரதேச நவீன அரங்க மரபு கலையரசு சொர்ணலிங்கம், பேராசிரியர் கணபதிப்பிள்ளை போன்றோரது தாக்கத்திற்குட்பட்டதாகவே அமைந்திருந்தது.

- இங்கு கிண்டலும், பகிடியும் நிறைந்த வசனங்களைப் பேசி மக்களைச் சிரிக்க வைப்பதற்கென ஒரு பகுதியினர் நாடகங்களைத் தயாரிக்கலாயினர். நண்டு நவரத்தினம் இதில் முதன்மையானவராகத் திகழ்ந்தார். இதனைத் தொடர்ந்து சினிமாப் பாணியிலான நாடக நிகழ்த்துகைகளும், கூத்து அமைப்பிற்குள் நவீன சமூக உள்ளடக்கங்களைப் புகுத்தி உருவாக்கப்பட்ட படைப்புக்களும் எழலாயிற்று.

- கிழக்குப் பல்கலைக்கழகத்தினதும், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவனத்தினதும் அரங்கச் செயற்பாடுகள் புதிய முறையிலான நாடகப் பாணிகளை அறிமுகப்படுத்தியதுடன் அளிக்கை முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

- பல்கலைக்கழகத்தில் சி.மௌனகுருவினால் தயாரிக்கப்பட்ட புதியதொரு வீடு, இராவணேசன் என்பன நவீன அளிக்கை முறைக்குக் களம் அமைத்துக் கொடுப்பனவாக அமைந்தன.

- சூர்யா பெண்கள் அமைப்பினால் தயாரிக்கப்பட்ட நாடகங்கள் பெண்ணியம் சார்ந்த பிரச்சினைகளை எடுத்துக் கூறுவனவாக அமைந்தன.

- இதே போன்று அரங்க ஆய்வுகூடத்தினது இராவணேசன், காண்டவ தகனம் போன்ற தயாரிப்புக்கள் மரபினை, தொன்மங்களைச் சமகாலத்துடன் இணைத்துக் கூறுவதை முனைப்புறுத்துவதாக அமைந்தது.

**மலையகம்**

- மலையக நவீன நாடக வளர்ச்சிப் போக்கானது தென்னிந்தியக் கம்பனிகளின் தாக்கத்தினால் அடியிடப்படுகின்றன. கொட்டகை அமைத்து மேற்கத்தேயப் பாணிகளைப் பின்பற்றி நாடகங்கள் தயாரிக்கப்படலாயின. இதன் தாக்கத்தினால் இந்திய நாடக நடிகர்கள் இங்கு வந்து நாடகங்கள் நடித்ததுடன் நாடகங்களை எழுதும் போக்கினையும் முன்னெடுத்தனர். மலையகம் சார்ந்த சமூகப் பிரச்சினைகள் இதில் முதன்மை வகித்தன. பூகைலாசம், ராஜபாட், இந்திராகாந்தி, இளவரசன் போன்றன இத்தகைய சில தயாரிப்புக்களாகும்.

- 1950 இற்கு பிற்பாடு திராவிட இயக்கத்தின் தாக்கம் சமூக நாடகங்களை எழுதுவதற்கு வழிவகுத்தது. எம்.ஏ.அப்பாசின் ‘‘கள்ளத்தோணி’’ இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

- பின்னர் மலையக மக்களது பிரச்சினைகளை தேசிய பிரச்சினையாக எடுத்துக்காட்டும் மரபு இரா.சிவலிங்கம், திருச்செந்தூரன் போன்றோரால் முன்னெடுக்கப்பட்டன. ‘‘சிலைகள்’’ , ’’நாணயம்’’ என்பன இவ்வாறான தன்மையினைக் காட்டுவனவாகும்.

- இதனைத் தொடர்ந்து பல்வேறு நாடக மன்றங்களும், நாடக ஆளுமைகளும் நவீன அரங்க மரபுகளை உள்வாங்கிப் பல்வேறு நாடகங்களைத் தயாரித்து வருகின்றனர்.

தயாரிப்பு:- திருமதி இமாஜினி தேவதாஸ்,
ஆசிரியர்,
மு/ முல்லைத்தீவு மகா வித்தியாலயம்.